மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

# Diaspora Poems towards Feminism (Presenting Poems of Diaspora Ezlam Women Poets)

**Dr. P.S. Mooventhan**

**Associate Professor, Department of Tamil Studies, Annamalai University, Annamalai Nagar, India**

Manuscript ID : **MT17A0089**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 04.11.2022
Revised: 10.11.2022
Accepted: 17.11.2022
Published: 22.11.2022

Pages : 97-110

DOI: 10.5281/zenodo.7372503

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 4.0 International (CC BY-NC-SA 4.0) International License

OPEN ACCESS

**ABSTRACT:**

Art and literature have materialized the fact that women have been oppressed and denied rights for thousands of years. Migration has been happening all over the world in every era. The war situation in Eelam in recent times, the poor life that has happened because of it, and the migration that has happened as a result of that bad life, are worthy of attention. History forced them to live as refugees without any means of survival in their own land. They consoled themselves by expressing their sufferings in their country and in the country they went to live in poems. It is information technology that unites them. Diaspora poetry was created as one of such activities. They are expressing the hardships of life in their native country and the experiences of migration through literary works. The social condition of the diaspora was brought to light by the arrival of female poets in particular. Poems based on women are one of such events. This article explores how the feminism expressed by Eelam women poets is recorded in diaspora poetry.

**KEYWORDS:**

Migration, Diaspora, Feminism, Refugee, Women's Liberation, Journal

# பெண்ணிலை நோக்கில் புலம்பெயர் கவிதைகள் (புலம்பெயர் ஈழப் பெண்கவிஞர்களின் கவிதைகளை முன்வைத்து)

**முனைவர் ப.சு. மூவேந்தன்,**
*இணைப்பேராசிரியர்,*
*தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், இந்தியா*

## கட்டுரைச் சுருக்கம்

**பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெண்ணினம் நசுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்படும் வந்துள்ளதனைக் கலை, இலக்கியங்கள் பொருளாக்கியுள்ளன. உலகெங்கிலும் புலப்பெயர்வு ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்துகொண்டே வந்துள்ளது. அண்மைக்காலத்தில் ஈழத்தில் நிகழ்ந்த போர்ச்சூழலும், அதனால் நேர்ந்த அவல வாழ்வும், அவல வாழ்வின் விளைவால் நேர்ந்த புலப்பெயர்வும், கவனத்தில் கொள்ளத்தக்கவை. சொந்தமண்ணில் பிழைப்பதற்கான வழி இல்லாமல் அகதிகளாக வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது வரலாறு. இவர்கள் தங்கள் நாட்டில் பெற்ற பாடுகளையும், வாழ வேண்டிச் சென்ற நாட்டில் பெற்ற பாடுகளையும் கவிதைகளாக வெளிப்படுத்தி ஆறுதல்படுத்திக் கொண்டனர். இவர்களை ஒன்றிணைத்தது தகவல் தொழில்நுட்பமே. அவ்வாறான செயல்பாடுகளில் ஒன்றாகப் புலம்பெயர் கவிதைகள் உருவாக்கம் பெற்றன. சொந்த நாட்டில் பெற்ற வாழ்க்கை அவலங்களையும், புலப்பெயர்வு தந்த அனுபவங்களையும் இலக்கியப் படைப்புகளின் வழியாக வெளிப்படுத்தி வருகின்றனர். குறிப்பாகப் பெண் கவிஞர்களின் வருகையால் புலம்பெயர் நாட்டின் சமூக நிலை வெளிச்சத்திற்கு வந்தது. இவ்வாறான நிகழ்வுகளில் ஒன்றாகவே பெண்ணிலை சார்ந்த கவிதைகள் திகழ்கின்றன. ஈழப் பெண்கவிஞர்கள் வெளிப்படுத்தும் பெண்ணிலைவாதம் புலம்பெயர் கவிதைகளில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனைச் சுட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.**

## கருச்சொற்கள்

**புலம், பெயர்வு, பெண்ணியம், அகதி, பெண் விடுதலை, சஞ்சிகை**

## முன்னுரை

பெண்களுக்கான உரிமைகளை மீட்டெடுக்கும் இயக்கமாகப் பெண்ணியம் திகழ்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளாகச் சமூகத்தில் பெண் என்பவள் அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வந்துள்ளதனை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. தமிழகப் பெண்ணிலைவாதத்திற்கும் புலம்பெயர் ஈழத் தமிழ்க்கவிஞர்களின்

பெண்ணிலைவாதத்திற்கும் ஒற்றுமை - வேற்றுமைகள் உள்ளன. புலம்பெயர் வாழ்க்கைப் பகிர்வு, அவை ஏற்படுத்திய தாக்கங்கள் பெண்ணிலை நோக்கில் பெண்கவிஞர்களின் நோக்கில் இடம்பெற்றுள்ள திறத்தினை, புலம்பெயர் கவிதைகளின் வழியாக இக்கட்டுரை ஆய்வுக்கு உட்படுத்துகிறது.

## பெண்ணிய நோக்கு

சமூகத்திலும் பொதுவெளியிலும், இலக்கியத்திலும் பெண் என்பவள் பெண்ணாகப் பிறந்த காரணத்திற்காகவே உரிமைகள் மறுக்கப்படுவதும், ஒடுக்கப்படுவதும் அடிமைகளாக்கப்படுவதும் புறக்கணிக்கப்படுவதும் பிற்போக்கான தொடர்நிகழ்வாக இருந்து கொண்டு வருவதற்கு எதிர்ப்புக்குரல் கொடுத்து, விடுதலையை முன்னிலைப்படுத்தும் ஓர் இயக்கமாக உருவானதுதான் பெண்ணியம் ஆகும். கலை, இலக்கியங்களில் பெண்ணின் நிலை எவ்வாறு காட்சிப்படுத்தப்படுகிறது என்பதும், சமூகத்தில் அவளது நிலை எவ்வாறு உள்ளது என்பதனை ஆய்வு நோக்கில் அணுகும் ஓர் சிந்தனை இயக்கமாகப் பெண்ணியம் திகழ்கிறது. ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பலவாகும். இதனால் பெண்ணிய அணுகுமுறை நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் மாறுபட்ட அணுகுமுறைகளைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. இந்தியப் பெண்கள், குறிப்பாகத் தமிழகப் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கும், இலங்கையில் வாழும் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கும் மிகப்பெருமளவிலான வேறுபாடுகள் இருப்பதனை இக்கட்டுரை முன்வைக்கிறது.

## ஈழப் போராட்ட வரலாற்றில் கவிஞர்கள்

சமூக விடுதலைக்கான முன்னெடுப்புகளை எல்லாக் காலகட்டத்திலும் கவிஞர்களே முன்னெடுத்துள்ளனர். இந்திய விடுதலையில் தன்னைப் பெரிதும் ஈடுபடுத்திக் கொண்ட பாரதியார் முதல், இன்றைய கவிஞர்கள் வரை இதனைக் காணமுடியும். குறிப்பாக இலங்கை வாழ் தமிழர்களின் இனப்பிரச்சனை தொடர்பாக இலக்கியங்களே இன்றைக்கும் மிகப் பெருமளவிலான பதிவுகளைச் செய்துள்ளன. இன்றைக்கும் ஆறாத வடுக்களாய், துயரங்களின் தொடர்கதையாய் நிகழ்வுகள் இருந்துவருவது கண்கூடு. இத்தகு நிலையினை, “ஈழப் போராட்ட வரலாற்றில் முகமிழந்து போனவர்கள் ஏராளம். இவர்கள் செய்தது மனித உரிமைக்காய்க் குரல் கொடுத்ததும், மானிடப் பெறுமானங்கள் மீது அக்கறை காட்டியதும் அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்பியதும்தான்” என்றுரைக்கிறார் சக்தி (செல்வி, சக்தி இதழ், ப. 7). இத்தகு மானுட விடுதலையின் குரலாகவே பெண்ணியம் சார்ந்த பதிவுகள் ஈழக்கவிஞர்களால் செய்யப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

## இலங்கையில் பெண்ணிய நிலை

உலகநாடுகளில் பெண்நிலைவாத சிந்தனை இரண்டாம் உலகப் போரின் பின்னராக ஏற்பட்ட வாழ்வியல் மாற்றத்தாலும், அறுபதுகளில் ஏற்பட்ட கருத்துநிலை, வளர்நிலை மாற்றங்களாலும் ஏற்பட்டதுதான்.

பெண்கள் சமூக, குடும்பத் தளைகளிலிருந்து விடுபட்டு குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெண்களாகப் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்த போதே பல சிக்கல்களை எதிர்கொண்டு அவற்றிலிருந்து மீள்வதற்காக அமைப்பு ரீதியாகத் திரண்டனர். அதன் ஆக்ரோஷமான வெளிப்பாடே 'பெண்நிலைவாதம்' ஆகும்.

இலங்கையில் எண்பதுகளில் ஏற்பட்ட அரசியல், சமூகவியல் விழிப்புணர்வு, மொழி, இனம் போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்களுடன் பெண்நிலைவாதச் சிந்தனை அறிமுகப்படுத்தப்பட்டது.

பேரினவாதத்தின் அச்சுறுத்தலுக்கும் நெருக்குதலுக்கும் தமிழ் பேசும் மக்கள் உள்ளான போது அவர்களின் எதிர்ப்புணர்வு விடுதலைப் போராட்டமாக வெளிப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆண்கள் மட்டுமே போராளிகளாக இணைந்து கொள்ள பின்னர் இந்தப் பெண்களும் தங்கள் பங்களிப்பினைச் செய்துள்ளனர். இத்தகு வாழ்வில் தாம் எதிர்கொண்ட பிரச்சனைகள், சிக்கல்கள், துயரங்களைப் பெண்கவிஞர்கள் தங்கள் படைப்புகளில் வெளிப்படுத்தினர். பெண்கவிஞர்கள் தங்களின் சுயங்களை, தன்னுணர்வுகளையே தங்கள் கவிதைகளின்வழியாக வெளிப்படுத்தினர். இதனால் சமூகத்தில் பெண்ணின் நிலை உணரவும் உணர்த்தவும் பட்டது. இத்தகு சூழலை, "ஈழத்துப் பெண் எழுத்தாளர்களுடைய எழுத்துக்களில் ஆண்-பெண் உறவுமுறைச் சிக்கல்கள் மட்டுமல்லாமல் பேரினவாதத்திற்கு எதிரான குரலையும், யுத்தத்தினால் பெண்கள் பாலியல் வல்லுறவு போன்ற குரூரங்களுக்கு முகம் கொடுப்பது குறித்தும் தமது ஆக்க இலக்கியத்தில் படைத்தளிக்க முற்பட்டனர். இதுவே இன்றைய ஈழத்துப் பெண் எழுத்தாளர்களது மிக முக்கியமான தவிர்க்க இயலாத அனுபவ வார்ப்புகளாக இருந்து அவற்றின் அவசியத்தை இலக்கிய ரீதியாக நிலை நிறுத்தியுள்ளது" என்னும் சூரியகுமாரி பஞ்சநாதன் கருத்தால் தெளிவாகிறது. (ப. சூரியகுமாரி பஞ்சநாதன், பெண்நிலைவாதச் சிந்தனையின் அவசியம், சக்தி இதழ், ப. 10)

## புலம்பெயர் கவிதை

புலம்பெயர்வு இலக்கியம் 1980களில் வீரியமடைந்தது. குறிப்பாகக் கவிதைத் துறையில் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு நிகழ்ந்தது. புலம்பெயர்ந்த நாடுகளில் பெற்ற அனுபவங்கள், வாழ்நிலைகள் அவர்களது படைப்புகளைப் பிறிதொரு தளத்தில் இயங்கச் செய்தன. இந்த நிலையை, "தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து முற்றிலும்

புதியதான ஒரு சூழலில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஆவணப்படுத்துவதிலும் அவற்றைக் கலாபூர்வமாகப் பிறருடன் பகிர்ந்து கொள்வதிலும் இவர்கள் காட்டிய ஆர்வம் அல்லது முனைப்பு கனதியான பல்வேறு கவிதைகளை வெளிக்கொணர்ந்தது. இக்கவிதைகள் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பின் எல்லைகளைப் பிறிதொரு தளத்தில் தடத்தில் கொண்டு செல்வனவாக அமைந்திருந்தன எனக் குறிப்பிடலாம்" என்றுரைக்கிறார் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன். (கிருஷ்ணபிள்ளை விசாகரூபன். புலம்பெயர் கவிதை, ப. 9)

## பெண்கவிஞர்களின் கவிதைப்பொருள்

வாழ்வியலை நிலைநிறுத்த வேண்டி, நாட்டின் எல்லைகளைக் கடந்து, சொந்தங்களையும் நட்பினரையும் விடுத்துப் புலம்பெயர்ந்து செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழர்கள் தாம் தமது சொந்த நாட்டில் பட்ட அவலங்களையும், புலம்பெயர்ந்த நாட்டில் பெற்ற அனுபவங்களையும், தாய் நாட்டின் மீதான பற்றுதலையும் கவிதைகளாக வெளிப்படுத்தினர். குறிப்பாகத் தாய் மண்ணின் மீதான ஏக்கம், கரிசனம், பற்றுதல், உறவுகளின் தவிப்பு இவர்கள் கவிதைகளில் வெளிப்பட்டன. சொந்த மண்ணின் மீதான விடுதலை வேட்கை, புலம்பெயர் நாட்டில் பெற்ற அவலம், சகிப்புத்தன்மை ஆகியன கவிதைகளின் பொருளாக அமைந்தன. இத்தகு சூழலிலும் பெண்கள் படும் இன்னல்கள், வாழ்வியல் துயரங்கள், குடும்பச்சிறை, திருமண வாழ்க்கை, பொருளாதாரச் சிக்கல்கள் பாடு பொருளாக அமைந்தன.

## புலம்பெயர் வாழ்க்கை

வயிற்றுப்பாட்டிற்காகத் தனது உயிரணைய உறவுகளையும், சுற்றங்களையும், நட்பினரையும் விட்டுவிட்டுப் புலம்பெயர்ந்து சென்றதோடு, புலம்பெயர்ந்து சென்ற இடத்தில் துன்பங்களையும் துயரங்களையும் நாளும் சுமந்து தவிப்புக்குள்ளாகி, கிடப்பதையெல்லாம் ஏற்றுக்கொண்டு, பொய்யாய்ப் புனைந்துகொண்டு நலம் விசாரித்தலாகவே கழிகிறது வாழ்க்கை. நாளும் புனைவுகொண்டு வாழும் வாழ்நிலையில் தாங்கள் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதனை,

> **"நாங்கள் நல்ல சுகம்**
> **உங்கள் சுகம் எப்படி?**
> **பொய் எழுதி பொய் எழுதி**
> **பேனாவே நகைக்கிறது"** (**புலம்பெயர் கவிதைகள்**, ப. 65)

என்னும் கவிதை காட்சிப்படுத்துகிறது. தம் உறவினர்களிடம் தமது இருப்பினையும் வாழ்வினையும் பொய்யாகச் சொல்லியாகிலும் தமது இருப்பினைக்

காட்டவேண்டிய அவல நிலையில் புலம்பெயர் வாழ்க்கை அமைந்துள்ளதனை இக்கவிதையால் உணர்த்துகிறார் கவிஞர்.

## தாய்நாட்டின் மீதான ஏக்கம்

எவ்வளவுதான் வசதி வாய்ப்பும், ஏற்றமும் புலம்பெயர்ந்த நாட்டில் கிடைத்திருந்தாலும் அவை எல்லாம் அகதியர்க்கு அந்நியமானவைதான். தன் சொந்த நாட்டில் கிடைக்கும் விடுதலை உணர்வு உலகில் எங்குச் சென்றாலும் கிட்டாது. உரிமையாகிவிட்ட மண்ணையும் மக்களையும் மறக்க இயலாத நிலையில் ஏங்கித் தவிப்பதனைக் கவிதைகளின் வழியாகப் பெண்கவிஞர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

'பனித்துளி' என்னும் தலைப்பிட்ட அர்ச்சனாவின் கவிதை புலம்பெயர்ந்து சென்றாலும், தன் தாய்நாட்டின் மீதான ஏக்கத்தோடு காலத்தை கழிக்க வேண்டிய நிலையில் இருக்கும் பெண்மனதைக் காட்டிநிற்கிறது.

**"உனக்கென்ன வெளிநாட்டில்**
**ராசா வாழ்க்கை**
**செலவுக்குப் பணம் கேட்டு வருகின்ற**
**தபால்களின் கேலிகள்**
..........................
**இன்னும் எத்தனை**
**குளிர்காற்று மோதும் சாமங்களில்**
**தூக்கம் கலைந்து**
**தனிமைச் சிறையில் அடைபட்ட கைதியாய்**
**நெஞ்சில் மூச்சு அடைபட**
**ஓவென ஜன்னலைத் திறந்து**
**வயற்பரப்பில் நின்று**
**வானத்தை அண்ணாந்து பார்க்கும்**
**ஒரு ஏழை விவசாயியைப் போல்**
**கண்களைக் கூராக்கி**
**பார்வையைச் செலுத்தித் தேடுவேன்**
**எங்கே இருக்கிறது**
**எனது தாயகம்"** (**புலம்பெயர் கவிதைகள்**, ப. 108)

என்னும் கவிதை எடுத்துரைக்கிறது. தாயகம் குறித்த ஏக்கத்தினையும், உறவுகளைத் தேடி அலையும் உணர்வின் வெளிப்பாட்டினையும் இக்கவிதை உணர்த்தக் காணலாம்.

மைத்திரேயியின் ‘ஊரிலிருந்து ஒரு கடிதம்’ என்னும் தலைப்பிட்ட கவிதை, சொந்த நாட்டில் அகதியாக வாழ்வதற்கும், வேற்று மண்ணில் அகதியாக வாழ்வதற்கும் உள்ள வேறுபாட்டினைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

**“சொந்த மண்ணிலேயே**
**அகதியாய் வாழ்வதற்கும்**
**அந்நிய மண்ணில் அகதியாய்**
**வாழ்வதற்கும்**
**என்ன வித்தியாசம்?**
**என்று கேட்கலாம்**
**ஆனால்**
**இருப்புக்கும் வாழ்வுக்கும்**
**என்ன வித்தியாசமென்று**
**நான் சொல்லத் தேவையில்லை”** **(புலம்பெயர் கவிதைகள், ப. 48)**

## புலப்பெயர்வு தந்த சுதந்திரவாழ்க்கை

புலப்பெயர்வு பல்வகைகளிலும் ஏக்கங்களையும், மனஉளைச்சல்களையும் தந்திருந்தாலும் அவ்விடங்களில் அவர்கள் பெற்ற நன்மைகளும் பல உள்ளன. குறிப்பாகப் பொருளாதாரத் தன்னிறைவு, சுதந்திரமான நிலை, கல்வி இன்ன பிறவற்றைக் குறிக்கலாம். புலப்பெயர்வு தாயகத்தில் பெண்களுக்கு நிலவிய அடிமைச்சிறையிலிருந்து விடுவித்துக் காத்துநிற்கும் நிலைக்கு ஏற்றம்பெற வைத்துள்ளது என்பதனை வசந்திராஜா,

**“போர் தருகின்ற**
**சோகங்களுக்குள்ளாலேயும்**
**ரகசியமாய்**
**சிலிர்த்துக் கொள்ளுகின்றேன்**
**புலம்பெயர்ந்தமை**
**தங்கத்தட்டில் தந்திட்ட சுதந்திரம்**
**என் மகள்களுக்கும்**
**நம் பெண்களுக்கும்”** **(புலம்பெயர் கவிதைகள், ப. 68)**

என்னும் கவிதையால் வெளிப்படுத்துகிறார். தங்கள் சொந்த நாட்டினை விடுத்து, அந்நிய மண்ணில் வாழத்தலைப்பட வேண்டிய அவல நிலை ஒரு புறம் இருந்தாலும், சொந்த நாட்டில் கிடைக்காத வசதி வாய்ப்புகள் சற்றேனும் தாங்கள் அடைக்கலம்

அடைந்த நாடுகளில் கிடைப்பதனை எண்ணி உவகைகொள்ளும் மனநிலையில் ஒரு தாய் இருப்பதனை இக்கவிதை எடுத்துரைக்கிறது.

## புலப்பெயர்வில் வதைபடும் பெண்ணினம்

தாய்நாட்டின் ஏக்கங்களை மறந்தும், துறந்தும் அந்நிய நாட்டில் அகதி வாழ்க்கை மேற்கொண்டபோதும் பெண்ணின் வேலைப்பளு ஒருநாளும் குறையவில்லை. பெண் என்பவள் இயந்திரமாகவே இயங்க வேண்டிய நிலைக்குள்ளேயே இன்னும் இருக்கிறாள் என்பதனை,

**“அவள் கால்கள் சக்கரங்கள்**
**ஓய்வின்றி சுழல்கிறது**
**சூரியப்புலவின் முன் இங்கேயும்**
**பெண்ணின் பெருமைக்காய் எழுதல்**
**நிகழத்தான் செய்கிறது**
**குளிரோ வெயிலோ**
**காலத்தோடு புணர்தல்**
**கடமைக்காய் பம்பரமாதல்**
**புலம்பெயர்ந்த போதும் மாறுபடாத ஒன்று**
**உழைப்புப் பெருக்கப்பட்டு**
**உடல் வருத்தப்பட்டாலும்**
**பத்தினிப் பட்டத்திற்காய் புன்னகைத்து**
**பாடாய் படுவது**
**முதுகில் ஏற்றப்பட்ட புதிய பளு”** (**புலம்பெயர் கவிதைகள்**, ப. 70)

என்னும் சுமதிரூபனின் கவிதை எடுத்துரைக்கிறது. உலகில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் தமிழகப் பெண்ணின் நிலை பழமைவாதத்திலேயே ஊறிக் கிடக்கிறது என்பதனையும் அவள் எல்லா இடங்களிலும் சுயமற்றவளாகவே நோக்கப்படுகிறாள் என்பதனையும் இக்கவிதை உணர்த்துகிறது.

## பழமையில் வதைபடும் பெண்ணினம்

புலம்பெயர்ந்து வாழுகின்ற நாடுகளில் தேசவழமைகள் பெண்களுக்கு எவ்வளவுதான் உரிமைகளையும் விடுதலை உணர்வினையும் தந்திருந்தாலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் சொந்தநாட்டில் நிலவிய அடிமை வாழ்க்கை தலைதூக்கி நிற்பதனை மைத்திரேயி,

**“அன்றொரு விருந்தில்**
**வழமைபோல**
**ஆண்களும் பெண்களும்**
**தனித்தனியாய் குழுமியிருந்தபோது**
**ஏதோ பகிடி கேட்டு**
**வாய்விட்டு நாம் சிரித்தோம்**
**நாம் நாமாய்**
**நாமும் மனிதராய்**
**எவ்விதத்; தடங்கலுமின்றி**
**அப்பாது நீ சொன்னாய்**
**ஐயையோ பெண்பிள்ளைகள்**
**இப்படிச் சிரிக்கலாமா?**
**அப்போது தெரிந்துகொண்டேன்**
**உன் மாற்றத்தின் திசை**
**முன்னோக்கியல்ல**
**பின்னோக்கி**
**அதுவும் பாட்டி காலத்துக்கு…”** **(புலம்பெயர் கவிதைகள், 81-82)**

என்னும் கவிதையால் எடுத்துரைக்கிறார். புலம்பெயர்ந்த நாட்டிற்குச் சென்று சற்றேனும் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு நலமுடன் வாழ்ந்தாலும், பண்டைய மரபு, வழக்காறு என்பதனை இன்னும் விட்டுவைக்காத மக்கள் இருக்கிறார்கள் என்ற நடப்பியல் உண்மையை இக்கவிதை காட்சிப்படுத்துகிறது. பொதுவெளியில் ஒருபெண் வாய்விட்டுச் சிரிப்பதற்கும் அனுமதிக்காத நிலை, அதனூடான உள்கற்பிதங்கள் இன்றைக்கும் இருப்பதனை இக்கவிதை எடுத்துரைக்கிறது. புலம் பெயர் நாட்டிலும் பெண்கள் சுதந்திரமாகச் சிரிப்பதற்கும் அனுமதி இல்லை என்பதனை இக்கவிதை காட்டுகிறது.

## பால்நிலை பேதப்படுத்தப்படுதல்

பிறப்பின் காரணமாகப் பாகுபடுத்தப்படும் வேறுபாடுகள் பல திறத்தவை. அவற்றில் பாலினப் பாகுபாடு எல்லாச் சமூகங்களிலும் அழுத்தமாகப் பதிந்திருக்கிறது. ஆண் பிறப்பு உயர்ந்ததென்றும், பெண் பிறப்பால் அவனுக்கு அடுத்தநிலையில் இருக்கப் பிறந்தவள் என்பதுமான கருத்துருவாக்கம் பல்லாண்டுகளாகச் சமூகத்தில் பதிந்துவிட்டது. இதனால் பாலின் அடிப்படையில் பாகுபடுத்தப்படுவதும், ஆணுக்கு முதலுரிமை தருவதும் தொடர்கதையாக இருக்கிறது. இவ்வாறான சமூகக் கட்டமைப்பினை, “ஒருவர் ஆணாக இருப்பதோ, பெண்ணாக இருப்பதோ உயிரியல் அமைப்பு முறையைச் சார்ந்த விடயமாகும். இயற்கையின் விளைவால் பெண்ணாகப்

பிறந்த ஒருவர் இயற்கை சார்ந்து பார்க்கப்படாமல் சமூகக் கட்டுக்களால் குறைத்து மதிப்பிடப்பட்டமையே பால நிலை வேறுபாட்டிற்கு முக்கியக் காரணம்" என்கின்றனர். (சக்தி, இதழ், ப. 24)

ஆண்பால் உயர்ந்தவன் என்ற கற்பிதம் காலம் காலமாகச் சமூக உறவுகளால் தீர்மானிக்கப்பட்டுவிட்டபடியால் தான் ஆதிக்கம் செலுத்துவதற்கும், அனுபவிப்பதற்கும், மன்னிப்பதற்கும், பொறுத்துக்கொள்வதற்கும் பிறந்தவன் என்ற ஆணவக் கருத்து நிலைபெற்றுவிட்டது. இந்நிலை மாற்றம் பெற வேண்டும்; 'ஆணும் பெண்ணும் சரிநிகர்'; என்பதே பெண் கவிஞர்களின் கருத்தாக இருக்கிறது. இந்நிலையினை,

**"மானி**
**உயர்ந்தவன்; உன்னதமானவன்**
**தனித்துவமானவன்**
**நான்**
**ஆண் என்பதால்**
**ஆற்றல் உள்ளவன்**
**அனைத்தும் அறிபவன்**
**குற்றம் செய்ய முடியாதவன்**
**குற்றம் இருந்தாலும்**
**மன்னிக்கப்பட வேண்டியவன்.**
**ஏனெனில்**
**நான் ஆண் குறியை உடையவன்**
**எனது ஆண்குறி**
**எப்போதும் எங்கு வேண்டுமானாலும்**
**யாரைக் கண்டாலும்**
**விறைக்கக் கூடியது**
**அது இயற்கை**
**பண்பாடு**
.........
**நீ யார்?**
**வெறும் பெண்**
**இந்த விறைப்பை தீர்க்கப்**
**படைக்கப்பட்டவன்**
**நான்**
**உயர்ந்தவன்**
**உன்னதமானவன்**

**போற்றப்பட வேண்டியவன்**
**நான் தான்**
**கட்டுப்பாடுகள் அற்றவன்.**
**சந்தோசமானவன்**
**எனது ஆண்குறி**
**விறைக்கக் கூடியது"** (சக்தி, இதழ், ப. 22);

என்னும் கவிதை எடுத்துரைக்கிறது. மானுடப் பிறப்பு அனைவருக்கும் ஒன்றென உணர்ந்த ஆண், தன்னைச் சமூகத்தின் எல்லா நிலையிலும் உயர்ந்தவனாகக் கருதிக் கொள்வது அதிகாரத்தின் குறியீடே தவிற வேறு எதுவும் இல்லை என்பதனை இக்கவிதை உணர்த்தி நிற்கிறது.

## நுகர்வுப் பொருளாக்கப்படுதல்

பெண் என்பவள் போர்ச்சூழலில் அடிமைப்பொருளாக்கப்படுகிறாள். அந்நிய மக்களிடத்தும், தன் சொந்தச் சமூகத்திடமும் நுகர்வுப் பொருளாக்கப்படுகிறாள். அவளது உணர்வுகள், ஆசைகள், கனவுகள், பணிகள், அறிவுத்திறன் யாவும் புறக்கணிக்கப்பட்டு, அவளது உடல் மட்டுமே நுகர்வுக்கான பொருளாகப் பார்க்கப்படுவது காலம் காலமாக இருந்து வருவதனைக் கவிதைகள் காத்திரமாக எடுத்துரைக்கத் தவறவில்லை.

'ஆண்' என்ற தலைப்பிட்ட கவிஞர் பாமினியின் கவிதை, பெண்கள் சொந்த நாட்டில் மட்டுமின்றி, புகலிடம் சென்ற நாடுகளிலும் சீரழிவுக்குள்ளாக்கப்படுவதைக் காட்டுகிறது.

**"அன்று கூலிப்படை**
**எனதுடலை**
**பதம் பார்த்தது**
**பின்பு**
**அந்நிய இராணுவம்**
**தன்னை**
**திருப்தி செய்தது**
**இன்று**
**மண்ணின்**
**மைந்தர்கள்**
**தமது**
**தேவைகளையும்**
**வேறுபாடேதும் இன்றி**
**செய்தே முடித்தனர்**

**இவையாவும்**
**தாய் நாட்டில்**
**என்னால்**
**பிராங்போட்**
**வந்திறங்கியும்**
**ஐரோப்பிய சுகத்தில்**
**விரக்தியுற்றவர்கள்**
**தமது கைவரிசையை**
**இங்கும்**
**காட்டத்தவறவில்லை**
**இவர்கள் யார்**
**எமது**
**உடன்பிறப்புகள்**
**என்று**
**சொல்லிக்கொள்ள**
**நாக்கூசும்**
**உதவாக்கரைகளே!"** **(புலம்பெயர் கவிதைகள், பக். 78-79)**

ஆண் என்பவன் எல்லா நிலைகளிலும் பெண்ணை நுகர்வுப் பொருளாகவே அணுகுகிறான் என்பதனை இக்கவிதை காட்சிப்படுத்துகிறது.

## பெண்ணின உரிமை வேட்கை

புலம்பெயர் கவிஞர்களின் கவிதைகளில் பெண்களுக்கான அறிவுரையும் விழிப்புணர்வினையும் தரும் கவிதைகள் பெருமளவில் படைக்கப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்து சென்ற நாடுகளிலும் பெண்ணின் உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டும், இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டும் அடிமைச்சிறையில் வாழவேண்டிய நிலையில் இருந்து வெளியேறத் தகுதிப்படுத்தும் விதத்தில் கவிதைகள் அமைந்துள்ளன.

பெண்களின் சிந்தனை விரிவடைதல், வேலை செய்தல், தனித்து வாழ்தல், புதிய சூழலுக்குத் தம்மைத் தயார்ப்படுத்துதல், அடக்குமுறையை எதிர்த்தல், அனைத்துலக நோக்கு ஆகியவற்றை இந்த வரையறைக்குள் அடக்கிப் பார்க்க முடிகிறது.

ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் நிலையும், பெண்கள் மத்தியிலும் சமூகத்தின் மத்தியிலும் இருக்கும் கோட்பாடுகளைக் கேள்விக்கு உட்படுத்தும் சந்தர்ப்பங்களும் பெண்களின் படைப்புக்களில் அவதானிக்க முடிகின்றது.

**'சமையல் தொடங்கி படுக்கை வரை**
**இலவச சேவை வழங்கியது போதும்**
**சுமைகளும் துளித்துளியான துன்பத்தின்**
**வெளிப்பாடுகளும் மட்டும் உனதல்ல.**
**சூழவுள்ள சகலவற்றிலும்**
**உனக்கும் சம பங்குண்டு**
**வெளியே வா.' (புலம்பெயர் கவிதைகள், ப. 78)**

என்ற பாமினியின் கவிதை வரிகள் பெண்ணின் உணர்வுகளைத் தட்டி எழுப்புகின்றன. குடும்பம், உறவுகள், சமூகம், வாழிடம், பணியிடம் என ஒவ்வொன்றிலும் அடிமைச் சிறைப்பட்டு கைதியாகிப் போன பெண்ணின் உணர்வுகளுக்கு வடிகாலாக இக்கவிதை வரிகள் அமைந்திருக்கிறது. மனித உரிமைகளுக்கு, உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத வரையில் பெண் என்பவள் துயரச்சிறையிலேயே அடைபட்டுக் கிடக்க வேண்டியதுதான் என்பதனைக் குறித்து, ஆணுக்குள்ள உரிமைகள் யாவும் பெண்ணுக்கும் உண்டு என்பதனைச் சொல்லி, அதனைப் பெறுவதற்காக வெளியேறி வருவதே விடுதலை என்று சொல்லி பெண்களை அழைப்பதனை இக்கவிதையால் உணர்த்தக் காணலாம்.

“இன்று சாதாரண ஆக்க இலக்கிய மட்டத்திலிருந்து நவீனத்துவ ஆய்வுகள் வரை பெண்கள் தமது பிரச்சனைகளைத் தன்னிலை நின்று வெளிப்படுத்துவதன் அவசியமும், தேவையும் ஆய்வியல் ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பெண்ணின் மேல் ஆணாதிக்கம் கட்டவிழ்த்துள்ள பண்பாடு, கலாச்சாரத்திற்கு அமைவான சமுதாய ஒப்பந்தங்களிலிருந்து பெண் ஆனவள் தன் சுயத்தை மீட்டெடுக்க முடியாதவாறு கட்டுக்கள் இறுக்கப்பட்ட நிலையில் ஆணாதிக்கத்தைச் சாடுதலும், ஆணடக்கு முறைக்கு எதிராகவும் கிளர்ந்தெழுதல் பெண் எழுத்துக்களின் முக்கியப் பண்பாக அமைகிறது” என்னும் சூரியகுமாரி பஞ்சநாதனின் (சக்தி இதழ், ப. 17) கருத்தியலை வெளிப்படுத்துவதாக இக்கவிதை அமைந்திருக்கிறது.

கலையானது இன்றைக்குக் கருத்து வெளிப்பாட்டிற்குரிய சாதனமாகி, மக்களை அறிவூட்டிக் கொண்டிருப்பது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் மாற்றுச் சிந்தனைகளின் வெளிப்பாட்டிற்கும் இக்கலையே பிரதான வடிகாலாகி இன்றைய கால தேவைகளைப் பூர்த்தி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

உலகெங்கிலும் பெண்கள் அடக்குமுறைக்கும் ஒடுக்குதலுக்கும் உள்ளான நிகழ்வினைக் கவிதைகள் பொருளாக்கி வருகின்றன. அவ்வகையில் உருவானதாகவே புலம்பெயர் பெண்கவிஞர்களின் கவிதைகள் விளங்குகிறது. தங்கள் தாய் மண்ணை

தொகுதி-2 பதிப்பு-4 டிசம்பர் 2022 | E-ISSN: 2583-0449

விடுத்து, அந்நிய நாட்டில் தஞ்சம் புகுந்தமையால் அவர்களது வாழ்க்கை மேன்மை பெற்றிருந்தாலும் இன்றைக்கும் தாய் நாட்டின் மரபுகள் காக்கப்படும் நிகழ்வுகளில் ஒன்றாகவே பெண்ணிய நிலை நோக்கப்படுகிறது என்பது உணர்த்தப்பட்டுள்ளது. பெண் என்பவள் பொருளாதார மேன்மை பெற்றிருந்தாலும், சுயச்சார்புடன் வாழப் பழகியிருந்தாலும் அவள் ஆண் மைய நோக்கிலேயே அணுகப்படுகிறாள் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. பெண்ணின் உணர்வுகள், ஏக்கங்கள், ஆசைகள் ஆகியன மறைபொருளாகவே இருக்க வேண்டும் என்பதும் அது கட்டுக்குள் வைக்கப்பட வேண்டும் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. இவற்றிற்கு எதிராகப் பெண்களுக்கான உரிமைகள், சுதந்திரம், குரல், மொழி பெண்கவிஞர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் இலங்கைத் தமிழர்களின் கவிதைகளில் பெண்ணியம் சார்ந்த விடயங்கள் வெகு வீரியத்துடன் பதிவாக்கம் பெற்றுள்ளதனைக் காணமுடிகிறது. இக்கவிதைகளில் குறிப்பாக, ஆண் பெண் சமத்துவநோக்கு, பெண் அடிமைத்தனம், ஆணாதிக்கத்திற்கெதிரான எதிர்ப்புணர்வு, சீதனத்திற்கு எதிரான போக்கு, அடிமை வாழ்வின் எதிர்ப்பு முதலானவை பதிவாக்கம் பெற்றுள்ளன.

எண்பதுகளில் தமிழ் இலக்கியத்தில் ஊடுருவத் தொடங்கிய இக்கோட்பாடு தொண்ணூறுகளில் மேலும் ஆழத்துடனும், வீறுடனும் வளர்ச்சி பெற்று இன்று அது ஒரு நவீன இலக்கிய விமர்சனப் பார்வையாக மலர்ந்துள்ளது. பெண்நிலைவாதக் கோட்பாடானது பெண்களை நவீனப்படுத்தும் சிந்தனை எழுச்சியாக இருப்பதால் இக்கோட்பாட்டிற்குள் அடக்கப்படும் விடயங்கள் சமூக இலக்கியப் பரப்பில் அதன் முழுமையை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்பதனை அவதானிக்கலாம்.

## துணைநூற்பட்டியல்


1. திருநாவுக்கரசு (தொ.ஆ.), புலம்பெயர் கவிதைகள், நிழல் வெளியீடு, சென்னை, 2001
2. கிருஷ்ணபிள்ளை விசாகரூபன், புலம்பெயர் கவிதை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம், (ப.ஆ. இல்லை)
3. சி. சிவசேகரம் (மற்றும் பிறர்), பெண் விடுதலையும் சமூக விடுதலையும், புதிய பூமி வெளியீட்டகம், கொழும்பு, 2002
4. சக்தி இதழ்-27, புலம்பெயர் தமிழர்களின் சஞ்சிகை, இலண்டன். மே 2003
5. பெண்ணின் குரல், சஞ்சிகை, கொழும்பு, இலங்கை, பங்குனி 1991.
6. www.noolagam.org.

## REFERENCES

1. Thirunavukarasu (T.O.), Poems of Diaspora, Nizhal Publication, Chennai, 2001
2. Krishnapillai Visakharuban, Diaspora Poetry, Jaffna National College of Education, Jaffna, (No Ed.Year)
3. C. Sivasekaram (and others), Women's Liberation and Social Liberation, Puthiya Boomi Publishing House, Colombo, 2002
4. Shakti Magazine-27, Journal of Diaspora Tamils, London. May 2003
5. Woman's Voice, Magazine, Colombo, Sri Lanka, Panguni 1991.
6. www.noolagam.org.